(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SRIVILLIPUTTUR
CC. NO.71/2018

**Depostitions of PW- 4 Witness for**

| Name | திரு. பாண்டியன் | Caste | |
|---|---|---|---|
| Father's name | மாரியப்பன் | Calling | அரசு பேருந்து நடத்துனர் |
| Village | சுந்தர்ராஜபுரம் | Religion | |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age. | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of May- 2024.

Signature of Witness.

23.05.2024

எதிரி ஆஜர்.

முதல் விசாரணை–

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து அரசு பேருந்து நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா. 1 கொத்தாளமுத்து விபத்துசம்பவத்தின் போது நான் நடத்துனராக பணிபுரிந்த அரசு பேருந்தின் ஓட்டுனர் ஆவார். கடந்த 28.03.2017 ம் தேதி மதியம் 12.00 மணியளவில் நான் TN 67 N 0409 என்ற எண்கொண்ட அரசு பேருந்தில் நடத்துனராக பணியில் இருந்தபோது மேற்படி பேருந்து கிருஷ்ணன்கோவில்அடுத்து உள்ள VPM கல்லூரி பேருந்து நிறுத்தத்தில் பயணிகளுக்கு பயணச்சீட்டு கொடுத்துக்கொண்டிருந்தேன்.

2. அப்போது அந்த பேருந்து பேருந்து நிறுத்தத்தினை தாண்டி வடக்கில் இருந்து தெற்காக வந்துகொண்டிருந்தது. அந்த இடத்தில் ரோடு வேலை நடந்துகொண்டிருந்தது. திடீரென ஒரு சத்தம் கேட்டது. பேருந்தில் உள்ள அனைத்து பயணிகளும் பேருந்தினை விட்டு இறங்கினார்கள். நானும் பேருந்தில் இருந்து இறங்கி பார்த்தபோது ஒரு இருசக்கர வாகனம் எங்களது பேருந்தில் மோதி இருந்தது. அந்த இருசக்கர வாகனத்தில் ஒரு பையனும்,

அவருடைய அம்மாவும் இருந்தார்கள். அந்த பையன் யார் என்று தெரியாது. ஆஜர் எதிரி அந்த பையன் இல்லை.

3. பேருந்திற்கு விபத்து ஏற்பட்டுவிட்டதால் நான் பேருந்தில் இருந்த பயணிகளை மற்றொரு பேருந்திற்கு மாற்றி அனுப்பி வைத்தேன். பேருந்தின் ஓட்டுனர் கொத்தாளமுத்து விபத்து சம்பவம் பற்றி திருவில்லிபுத்தூர் பேருந்து பணிமனை நிர்வாகத்திற்கு தகவல் தெரிவித்தார். கொத்தாளமுத்து விபத்து சம்பவம் பற்றி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கக்கோரி அரசு தரப்பில் அனுமதி கேட்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு சாட்சியை திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலைய தலைமை காவலர் எண்.2294 திரு.கே. பொன் மகேஷ்குமார் அவர்களால் அடையாளம் காட்டப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்,**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

4. கடந்த 28.03.2017 ம் தேதி காலை 11.30 மணிக்கு நான் நடத்துனராக பணியில் இருந்த TN 67 N 0409 அரசு பேருந்து மதுரை ரோட்டில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்துகொண்டிருந்தபோது அந்த இடத்தில் தார் ரோட்டில் வேலை நடந்துகொண்டிருந்ததால் வாகனங்கள் மெதுவாக வரிசையில் சென்று கொண்டிருந்தது என்று சொன்னால் சரிதான். அப்போது பேருந்திற்கு வலது பக்கம் ஆஜர் எதிரி TN 67 AQ 4847 என்ற எண்கொண்ட ஹோண்டா சைன் இருசக்கர வாகனத்தின் பின்னால் அவரது அம்மா கூடம்மாளை உட்கார வைத்து அதிவேகமாகவும், அஜாக்கிரதையாவும், தலையில் ஹெல்மெட் இல்லாமலும் ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல.

5. அவ்வாறு ஓட்டி வந்து ஆஜர் எதிரி எங்கள் பஸ்சை ஓவர் டேக் செய்ய முயற்சி செய்து பஸ்சின் வலது பக்கத்தில் மோதி கீழே விழுந்து இருசக்கர வாகனத்திற்கு பின்னால் இருந்த அவரது அம்மா கூடம்மாவுக்கு தலை மற்றும்

கை, கால்களில் காயம் ஏற்பட்டு அவருக்கு இறப்பை ஏற்படுத்திய சம்பவத்தினை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

6.எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை எனத் தெரிவித்தார்.